REGD. No. M. 6311

PHONE No. 35630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 223

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY — THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 19உ செவ்வாய் (2—3—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 20உ புதன் (3—3—54)

தனி மனிதனின் சிந்தனையால் தரணியே சீராகும்!

—(:)—

அறிஞர் ராய் அரும்பணியும் அரசியல் தெளிவும் அதற்கோர் நற்சான்று

—(:)—

பொதுவுடமை பேசினாலும் "மார்க்சியம்" அவருக்கு மத நூலாக இருந்ததில்லை

—(:)—

சீசர் ஆண்ட ஐரோப்பா சிதறுண்டதுபோல இந்தியாவும் மொழிவழி பிரிந்தே ஆகும் என்றார் எம். என். ராய்!

ராய் அனுதாபக்கூட்டத்தில் தோழர் நெடுஞ்செழியன் ஆற்றிய சொற்பொழிவு

★

சென்னை, மார்ச் 2—

"மக்களை அவர்களிலே ஒரு சிலர்தான் காட்டுமிராண்டி நிலையிலிருந்து மாற்ற—முன்னுக்குக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். மக்களின் மொழி, அரசியல், கலை, பண்பு, அறிவு ஆகிய துறைகளில் மனித சமுதாயத்தைக் காட்டுமிராண்டி நிலையிலிருந்து மாற்றி, முன்னேறச் செய்ய ஒரு சிலர்தான் முன்வருகிறார்கள். அந்த ஒரு சிலரின் சாகாத பரம்பரைதான், அறிவியல் துறையிலே, மக்களின் இன்பத்தை அதிகரிக்கவும், துன்பத்தைக் குறைக்கவும் முற்பட்டிருக்கிறது; ராய் இதைத்தான் மக்களிடம் சொன்னார்,"

—இவ்வாறு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 26-2-54 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற எம். என். ராய் அனுதாபப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

"ராய் அரசியல் துறையில் ஒரு பெரும் அறிஞராயிருந்தார் என்பதற்கு ஒரு சான்று போதுமானது. இரண்டாம் உலகப் பெரும் போரிலே, போலந்து நாட்டின்மீது ஜர்மானிய சர்வாதிகாரி ஹிட்லர் போர் தொடுத்தான்; அதற்காக ரஷ்யாவுடன் ஒரு இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டான்; அந்த ஒப்பந்தம் நடைபெற்ற நேரத்தில் வேறு பல அரசியல்வாதிகளெல்லாம் 'ஸ்டாலின் ஒரு அயோக்கியன்—ஹிட்லர் ஒரு அயோக்கியன்—இந்த இரு அயோக்கியர்களும் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்—இது உலகத்திற்கே ஒரு பெருங் கேடு' என்று சொன்னார்கள். ஆனால், ராய், 'இந்த ஜெர்மன்—ரஷ்ய உறவு நீண்டநாள் நிலைக்காது; ஓராண்டிற்குள்ளாகவே, இந்த ஒப்பந்தம் முறிந்துவிடும்' என்று கருத்துத் தெரிவித்தார். அப்படியேதான் நடந்தது. அவ்வளவு தெளிவாக, அரசியலை நுணுக்கமாக உணர்ந்திருந்தவர் ராய்.

"இந்திய நாட்டிலிருந்து—கோழைகள் வாழும் இந்த நாட்டிலிருந்து—ஒரு சாதாரண பெயர் மாற்றத்திற்குக்கூட முன்வராத தொடை நடுங்கிகளாய் வாழும் இந்த நாட்டிலிருந்து—வெளி நாடு சென்று அந்த நாடுகளில் பல்வேறு புரட்சி இயக்கங்களின் தந்தையாய் ராய் இருந்தாரென்றால்—புரட்சி இயக்கங்களின் தலைவராய்ப் பணியாற்றினாரென்றால் அவருக்கு துணிவும், உள்ள உரமும் எவ்வளவு இருந்திருக்க வேண்டும்? அந்த உள்ள உரத்திற்கும், துணிவிற்கும் ராய் ஒரு பெரும் எடுத்துக்காட்டாய் விளங்குகிறார்."

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு

எம். எஸ். சிவசாமிக்கு தனி வகுப்புச் சிறை

திருநெல்வேலி, மார்ச். 1—

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்டுள்ள தோழர்கள் எம். எஸ். சிவசாமி, கே. வி. கே. சாமி, என். நடராசன் ஆகியவர்களை கொக்கிகுளம் சிறையில் விசேட வகுப்புக் கைதியாக நடத்த உத்தரவிட வேண்டுமென அவர்கள் கொடுத்த மனுக்களை விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகரய்யர் விசாரணை செய்து தோழர் எம். எஸ். சிவசாமிக்கு மட்டும் விசேட வகுப்புத் தரும்படி மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு சிபாரிசு செய்தார். மற்றவர்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பாக எம். செல்லையப்பரும், சர்க்கார் சார்பாக டி. தின்னயிராம் பிள்ளையும் கோர்ட்டில் ஆஜரானார்கள்.

சூடானில் கலவரம்

பார்லிமெண்ட் திறப்பு விழா ஒத்திவைப்பு

கார்ட்டூம், மார்ச். 1—

கார்ட்டூமில் இன்று பலாத்கார ஆர்ப்பாட்டங்களும், ரகளையும் நடந்ததைத், தொடர்ந்து சூடான் பார்லிமெண்டின் ஆரம்ப விழா இம்மாதம் 10ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. கார்ட்டூமில் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்படுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் 21 பேர் மாண்டனர்; 117 பேர் காயமடைந்தனர்.

சூயஸ் கால்வாயில் கப்பல் போக்கு வரத்தில் எகிப்து தலையிடுவதை ஆட்சேபித்து, ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு ஓர் தீர்மானம் கொண்டுவரப்படும்.

வி. வி. தனுஷ்கோடி நாடார் மறைவு

மதுரை, மார்ச், 2—

தூத்துக்குடி நகர சபைத் தலைவரும், பிரபல வணிகரும், துறைமுகக் குழுத் தலைவரும், சீர்திருத்த நோக்கம் கொண்டவரும், விருதுநகர் தோழர் வி. வி. ராமசாமி அவர்களின் சகோதரருமான தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார் பிப் 27-ந் தேதி மாலை 4-30 மணிக்கு மதுரையில் இயற்கை எய்தினர். இறக்கும்போது அவருக்கு வயது 56 இந்த சோகச் செய்தியை மிகுந்த வருத்தத்துடனும், கவலையுடனும் தெரிவித்துக்கொள்கிறோம். தனுஷ்கோடி நாடார் அவர்களுக்கு 5 குமாரர்களும், 3 குமாரத்திகளுமுண்டு.

இருதய நோய் காரணமாக அவர் இங்குள்ள வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார் காலமான செய்தி தூத்துக்குடிக்குக் கிடைத்தவுடன், அவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தூத்துக்குடி நகர சபை அலுவலகம் மூடப்பட்டது. தேசியக் கொடிகள் பாதி கம்பத்தில் இறக்கிக் கட்டப்பட்டன. கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

தந்தையை இழந்து சிந்தை கலங்கி நிற்கும் அவரது மக்களுக்கும், உடன்பிறந்தாருக்கும், உற்ற நண்பர்களுக்கும், நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகின்றோம். (ஆ-ர்.)

அனுதாபம்

"தூத்துக்குடி தி. மு. கழகத்தின் முதல்வரும், நகரசபைத் தலைவருமான தோழர் வி. வி. தனுஷ்கோடி (நாடார்) அவர்களின் திடீர் மறைவு செய்தி கேட்டு மிக வருந்துகிறோம். தூத்துக்குடி ஒரு தலைவரை இழந்துவிட்டது. தலைவரை இழந்து வருந்தும் தூத்துக்குடி கழகத் தோழர்களுக்கும் தந்தையை பிரிந்து வாடும் தனயர்களுக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

—என்று சென்னை 21, கே. என். பாண்டியன் மருத்தகவுப் படிப்பகச் செயலாளர் அறிவிக்கிறார்.

பாக். பிரதமர் கனவு!

"துருக்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதுபோல மற்ற அரபிய நாடுகளுடனும் பாகிஸ்தான் ஒப்பந்தம்செய்து கொள்ள முடியும்,"

என்ப பாக். பிரதமர் பெஷாவர் மாவட்ட தேர்தல் கூட்டமொன்றில் கூறினர்.

பீகாரிலிருந்து நூல்கள், அணிகள் இவைகளை வெளிநாடுகளுக்கு அனுமதி பெற்றே அனுப்பவேண்டும் என பீகார் சர்க்கார் அறிவித்துள்ளது.

★

பெருந்தகை மறைந்தார்

தூத்துக்குடிப் பெருந்தகையாளர் தோழர் வி. வி. தனுஷ்கோடி அவர்கள் மறைந்தார், இனி நம்முடன் இருக்கமாட்டார், அவருடைய அன்பு தவழும் முகத்தை யாரும் இனிக் காணமாட்டார்கள், அவருடைய இனிய சொற்களை இனி யாரும் கேட்க இயலாது எனும் கொடுஞ் செய்தி நம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

"வி. வி. டி. மறைந்தார்" என்ற சொற்கள் நம் செவிகளில் விழுந்தபோது, திடுக்கிட்டோம்; திகைப்புற்றோம்; நம்பவே முடியவில்லை; ஆனால், உண்மை நிலை அச்செய்தியை உறுதிப்படுத்தவே செய்துவிட்டது.

தோழர் வி. வி. டி. அவர்களின் மறைவு பொதுவாகத் திராவிடப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக தூத்துக்குடி பொதுமக்களுக்கும் பேரிழப்பாகும்.

ஊரின் நடுவே நின்ற பழ மரம் வேரோடு பெயர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

லஞ்ச ஒழிப்பு ஏற்பாடு

—0—

திட்டக் கமிஷன் விதிகள்

புதுடில்லி, பிப். 28—

சர்க்கார் அதிகாரிகள், ஊழியர்கள் இவர்களிடையே லஞ்ச ஒழிப்பு ஏற்பாட்டுக்காக திட்டக் கமிஷன் விதிகளைத் தயாரித்து எல்லா மாநில சர்க்கார்களுக்கும் அபிப்பிராயம் கேட்டு அனுப்பியுள்ளது. எல்லா மாநிலங்களின் கருத்துக்கள் கிடைத்த பின்பு இதற்கான சட்டம் கொண்டு வரப்படும்.

இந்த விதிகளின்படி, எந்த சர்க்கார் ஊழியரும், ஸ்தாவர சொத்துக்கள் எதையும் சர்க்கார் அனுமதியின்றி விற்கவோ, வாங்கவோ முடியாது. விற்பது, வாங்குவது அங்கீகரித்த, ஏஜெண்டு மூலம் செய்யப்படுவதுடன், அந்த ஏஜெண்டின் விலாசத்தையும் சர்க்கார் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட காலமுறையில் தங்கள் சொத்துக்கள், பாங்கியிலுள்ள தொகை, இவை பற்றிய தகவல்களைக் குறிப்பிட்டு பிரதி ஆண்டும் எல்லா சர்க்கார் அதிகாரிகளும், சிப்பந்திகளும் சர்க்காருக்கு அனுப்ப வேண்டும்.

சென்னை, பிப். 29—

தென்னிந்தியாவைச் சுற்றி விமானப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போதுள்ள சென்னை—பெங்களூர், கோயம்புத்தூர், கொச்சி, திருவனந்தபுரம், விமானப் போக்குவரத்து மதுரை, திருச்சிராப்பள்ளியுடனும் விஸ்தரிக்கப்படும்.

நம் நாடு

தி.மு.க.தின் இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 2—3—1954 செவ்வாய்

"கடவுள் உண்மையை இதுவரை நிலைநாட்டியவர் ஒருவருமில்லை"

சிந்தாமணியின் - - 4-வது தாக்குதல்!

யூனியன் சர்க்காரின் 1954—55-வது ஆண்டினுடைய வரவு—செலவு திட்டம் வெளியாகிவிட்டது. இதுவரை யூனியன் சர்க்காரில் நிதி அமைச்சராக இருக்கிற சிந்தாமணி தேஷ்முக் அவர்கள், இத்துணைக் கண்டத்தின் பொது மக்கள் மீது மூன்று முறை தாக்குதல் நடத்தி இருக்கிருர். இப்பொழுது, அவருடைய நான்காவது தாக்குதலும் நடந்தேறிவிட்டது. யூனியன் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாக இருப்பதால், அவருடைய தாக்குதலுக்கு வெற்றிகரமான பாராட்டு காங்கிரஸ் ஆளவந்தார்களிடமிருந்து கிடைக்கும் என்பதில் வியப்பொன்றுமில்லை.

யூனியன் சர்க்காரின் நிதி அமைச்சர் என்ற முறையில், சி. டி. தேஷ்முக் இதுவரை அவர் கொடுத்துள்ள மூன்று தாக்குதலும், ஏழைகளான இத் துணைக்கண்டத்தின் சாதாரண மக்களின் வயிற்றில் அடித்து அவர்களை மேலும் வறியவராக்கவே செய்து வந்திருக்கிறது. இந்த நான்காவது, தாக்குதலும் அந்த இனத்தைச் சேர்ந்திருக்கும் ஒன்றேயாகும். இனம் மற்றோ, பழக்க வாசனையோ அல்லது இரண்டுந்தானே, தாம விடுக்கும் தாக்குதல் அனைத்தும் ஏழை எளியவரின் முதுகெலும்பை நொறுக்கும் மாதிரியிலேயே, சிந்தாமணியைத் தாக்குதல் நடத்தத் தூண்டுதல் அளிக்கிறது.

அவர் ஏற்கனவே சென்ற ஆண்டில் உருவாக்கிய நடைமுறை வர்த்தக வரவு-செலவு திட்டத்தில் ரூ. 80 கோடி துண்டு விழுந்திருக்கிறது. அடுத்த ஆண்டு வரவு-செலவு திட்டத்திலோ மொத்தத்தில் ரூ. 250 கோடி துண்டு விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி எதிர்பார்க்கப்படும் துண்டு விழும் தொகையான ரூ. 250 கோடியை, சாதாரண மக்களைக் கசக்கிப் பிழியும் சில மறைமுக வரிகளைப் போட்டு ரூ. 238 கோடியாகக் குறைத்திருக்கிருர். விதித்துள்ள புதிய வரிகள் மூலம் நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் நிகர வருமானம் ரூ. 12 கோடிக்கும் குறைவானதாகத்தான் இருக்கிறது. இப்படி புது வரிகள் போட்டும் துண்டு விழும் பெரும் தொகையைக் கணிசமாகக் குறைக்க முடியாத நிலைமை இருக்கிறபொழுது, துண்டு விழும் தொகையை ரூ. 250 கோடியாக இருக்கப் பார்ப்பதில் வந்துவிடப் போகிற ஆபத்து ஒன்றுமில்லை. துண்டு விழும் பெரும் தொகையை, பொதுமக்களிடம் கடன் எழுப்பியா, நோட்டுச் செலாவணியைப் பெருக்கியோ, வெளி நாடுகளின் உதவி பெற்ருே நேர் செய்ய முனைந்திருக்கிற நிதி அமைச்சர், புதிய வரிகளின் மூலம் கிடைக்கும் சொற்பத் தொகையான ரூ. 12 கோடியையும் பெற மேற்கூறிய வகையிலேயே முயற்சிப்பதுதான் சிறந்ததாகும் என்றே எவரும் கூறுவர். ஆனால், தேஷ்முக்கிற்கும் அவர் சேர்ந்துள்ள காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கும் அடிப்படை நோக்கம், சாதாரண மக்களை வாட்டி வதைப்பதாக இருக்கின்றபொழுது, அந்த மூலக் கோட்பாட்டை உதறித் தள்ளி நடக்க அவர் முன்வருவார் என்று எப்படி எதிர்பார்ப்பது? நிற்க,

பாக்கு, பெரும்பாலும் எல்லா மக்களாலும் நித்தியப்படி உபயோகப்படுத்தும் பொருளாக இருந்தபோதிலும், உள்நாட்டில் உற்பத்தியாவதிலும் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதிலும் மொத்தத்தில் பெரும் பகுதி பாக்கை சாதாரண பாட்டாளி மக்கள்தான் பயன்படுத்துகிருர்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததாகும். காப்பி தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாள மக்களுக்கும், வயல்களில் வியர்வை சிந்த மாடுபோல உழைக்கும் ஏழை உழவர்களுக்கும், ஆலைகளில் இயந்திரத்தோடு இயந்திரமாக உடலின் ஓடும் குருதி காலில் வந்திறங்க கால் கடுக்க உழைக்கும் தொழிலாளர்களும், தங்கள் உழைப்பின் காரணமாக உற்சாகம் குன்றி, சோர்வு கண்டு வருகிற நேரத்தில், களைப்பை போக்கி மீண்டும் வேலை செய்ய சுறுசுறுப்பைக் கொடுக்கும் சமய சஞ்சீவியாக பாக்கு உதவுகிறது என்பதை மறப்பவர், இந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கம் தெரிந்துள்ளவர் என்றோ, மக்களின் நலத்தில் அக்கரை உடையவரென்ருே அவரை ஒருக்காலும் கொள்ளமுடியாது. மூளை உழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், பாக்கு, உற்சாகத்தை தரும் ஒரு வரப்பிரசாதம் ஆகும் என்பதை எவரும் மறுக்கத் துணியார்.

இப்படி அறிவு உழைப்பாளிகளுக்கும், உடல் உழைப்பாளிகளுக்கும் உற்சாகமூட்டும் உற்ற நண்பனாக உள்ள பாக்கிற்கு நிதி அமைச்சர் வரி போட்டு இருக்கிருர என்பது, சாதாரணமான மக்களுக்கு யூனியன் சர்க்கார் செய்யும் மன்னிக்க முடியாத மகத்தான துரோகம் என்பதே நமது கருத்து.

இறக்குமதியாகும் பாக்கிற்கு டவுண்டு ஒன்றுக்கு ரூ 0—6—6 இறக்குமதி வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த வரியின் காரணமாக, உள் நாட்டில் உற்பத்தியாகும் பாக்கின் விலையும் கூடுதலாகுமே யல்லாது ஏற்கனவே இருந்த விலையில் அப்படியே இருக்கப்போவதும் கிடையாது. இந்தப் புது வரியின் பலனாக, ஏழை மக்கள் சாதாரண உபயோகப்படுத்தும் பாக்கிற்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதோடு உள்நாட்டு உற்பத்தியாளர்களின் லாபக் கொள்ளையும் பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த பாக்கு இறக்குமதிவரி நியாயமானதுஎன்று வாதிடுகின்ற நிதி அமைச்சர், சிலகாலமாக பாக்கு இறக்குமதி வியாபாரிகள் அதிகமான லாபத்தை அடைந்திருக்கிருர்கள் என்றும், எனவே அந்த லாபத்தை அவர்களே முழுதும் எடுத்துக்கொள்ள விடாமல், அந்த லாபத்தில் சர்க்காரும் கொஞ்சம் பங்கு போட்டுக்கொள்ளுகிறது என்றும், இப்படி சர்க்கார் செய்ய முன்வருவதில் தவறு ஒன்றும் கிடையாது என்றும் நிதி அமைச்சர் பரவசப்படுகிருர்.

அவர் கூறுகின்றபடியே, சில காலமாகப் பாக்கு வியாபாரிகள் அதிகமாக லாபம் பெற்று வந்திருக்கின்ருர்கள் என்பது உண்மையானுல், இதுவரையில் பாக்கு வியாபாரிகள் கொள்முதல் விலையைக்காட்டிலும் அளவுக்கு அதிகமான விலைக்கு பாக்கை உயர்த்தி விற்று பொதுமக்களை அக்கிரமமாகக் கொள்ளையடித்து வந்திருக்கிருர்கள் என்றுதான் எவரும் கூறுவர். வியாபாரிகள் செலவுக்குக் கூடுதலாகப் பெற்று வந்த லாபத்தைக் குறைக்கச் செய்து, நியாயமான விலைக்கும் பொதுமக்களுக்குப் பாக்கு கிடைக்க வகை செய்வதுதான் ஒரு பொதுமக்கள் சர்க்காரின் கடமையாக இருந்திருக்க வேண்டும்.

ஆனல் யூனியன் சர்க்காரோ, அடக்க விலையைக் காட்டிலும், அதிகமான விலை வைத்து பாக்கை விற்கச் செய்து, கொள்ளை லாபம் அடிக்க வியாபாரிகளுக்கு சட்டப்படி அனுமதி கொடுத்துவிட்டு, அப்படி கொள்ளை அடித்ததில் கொஞ்சம் பங்கு போட்டுக்கொள்ள காங்கிரஸ் சர்க்காரும் இப்பொழுது முந்துவது என்ருல், இந்த சர்க்காரை எந்த வகையான சர்க்கார் என்று, எந்த ரகமான சொற்களால் சித்தரிப்பது என்பதே நமக்கு விளக்கமாக வில்லை.

ஒன்றே ஒன்று மட்டும் குறிப்பிடலாம் என்று கருதுகிருேம். அதாவது, கொள்ளை லாயம் வைத்து பாக்கை விற்று பொதுமக்களை ஒட்டாண்டிகளாக்கும் இறக்குமதி வியாபாரிகளும், அந்தக் கொள்ளை லாபத்தை வேண்டுமென்றே அனுமதித்து, சில நாள் சென்று கொள்ளையில் பங்கு கேட்கவரும் காங்கிரஸ் கட்சியினரின் கூட்டு சர்க்கார்தான் இது என்று இந்த சர்க்காருக்கும் பெயரிடுவதோடு, இற்றைக்கு நிறுத்திக் கொள்ளுகிருேம். மற்ற வரிகள் குறித்து பின்னர் விரிவாக எழுதுவோம்.

உழுபவனுக்கே நிலம் சொந்தம்

100-க்கு 10 பேர்தான் சொந்த நிலமில்லாமல் உழுபவர்கள்

பாங்காக், பிப் 28—

தாய்லாந்தில் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பதை நேரிடையாகக் காண முடியும். அங்கு 100-க்கு 90 பேர் விவசாயிகள்; தங்களுக்கென சொந்தமாக நிலங்களை வைத்துக்கொண்டு உழுகிருர்கள்.

தாய்லாந்தில் சாகுபடிக்காக உள்ள நிலத்தின் தொகை 9-கோடி 30 லட்சம் ஏகராக்களாகும்

நாடோடிகளுக்கு வேலையில் பயிற்சி

பாங்காக், பிப் 28—

தாய்லாந்தில் நாடோடிகளாகத் திரிந்துகொண்டிருக்கும் சுமார் 50,000 பேர்களைத் திரட்டி, அவர்களுக்குப் புதிதாக வேலை கற்பித்து, அவர்களை நல்ல முறையில் வாழ்க்கையை நடத்தச்செய்ய தாய்லாந்து பொதுமக்கள் வாழ்க்கை நலன் இலாகா திட்டம் தயாரித்துள்ளது.

சர்க்கரை ஆராய்ச்சி நிலையம்

இந்திய சர்க்கார் திட்டம்

புதுடில்லி, பிப் 28—

பம்பாய், திரு—கொச்சி, பெப்சு, அஜ்மீர் இவற்றில் சர்க்கரை உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்யப் புதிய திட்டங்களுக்கு மத்திய கரும்புக் கமிட்டி அதன் ஆண்டுக் கூட்டத்தில் அனுமதியளித்துள்ளது.

பாலூரில் ஒரு ஆராய்ச்சி நிலையமும், திருச்சி பகுதியில் ஒரு கூட்டு விவசாய முறை நிலைய அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

"எல்லா மதங்களையும் ஒற்றுமைப்படுத்துவது முடியாது"

கடவுளை நினைக்க நேரமில்லாமல் மக்கள் பரபரப்புடன் இருக்கிருர்கள்"

சென்னை, பிப். 28—

"ஒருவன் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பொறுத்தது தான் மதம் என்ற நினைப்பு இருக்கிற வரையில், ஒருவனுக்குக் குறிப்பிட்ட மதத்தில்தான் நம்பிக்கை இருக்க வேண்டும் மறறவற்றில் இருக்கக்கூடாது என்று சொல்வது கூடாததாகும். எனவே, என்ருவது ஒரு நாளைக்கு அனைவரையும் ஒரு மத நம்பிக்கை உடையவர்களாக ஆக்கிவிடலாம் என்ற ஆசையோடு, மதங்களுக்குள் ஒற்றுமையைக் காண எடுத்துக்கொள்ளப்படும் முயற்சி வெற்றியுறுமா என்று சொல்லுவது மிகமிகக் கஷ்டமான காரியமாகும்."

மேற்குறித்தவாறு திருவல்லிக்கேணி பிரெண்ட் சங்கத்தில் பேசிய முன்னுள் நீதிபதி எஸ். என் வரதாச்சாரி அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார். மேலும் அவர் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

"மதத்தைப் பொறுத்தவரை வரலாற்றுப் பூர்வமாக குறைந்தபட்சம் நானுவகையான போக்கு இருந்துவருகிறது. வெறுப்புணர்ச்சியின் காரணமாக மற்ற மதக் கருத்தினரை வதைப்பது; தாம் பின்பற்றும் மதத்தைத் தவிர்த்து மற்றவற்றை இழித்துப் பேசுவது; மற்ற மதங்கள் குறித்து சகிப்புத் தன்மை காட்டுவது; அலட்சியப்போக்கு.

"இன்னல்களில் இருந்து மீளுவதற்காக, பலவித கருத்துக்களை, ஒவ்வொரு காலத்திலும் சில சிறந்தவர்கள் கூறினர். அத்தகைய கருத்துக்களில் ஒன்று நாத்தீகம். மதத்தினுல் பிணக்கு ஏற்படவில்லை; ஆனல், மதத்தின் பெயரால்தான் சண்டை மூளுகிறது என்பதை மேற்குறிப்பிட்ட கருத்தினர் காணத் தவறிவிட்டனர் என்றே குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. வேறு மதக் கோட்பாடுகளைச் சேர்ந்தவர்களிடம் பகை பாராட்டும்படி எந்த ஒரு மதமும் போதிக்கவில்லை."

"நாத்திக நோக்கு நாட்டில் பரவலாக இருப்பதினுல், கடவுளை நினைக்கவும் நேரமில்லாமல் மக்கள் மிக மிகப் பரபரப்புடன் இருந்துவருகிருர்கள். கண்ணுக்குத் தெரியாத, அறிவினுல் அறிய முடியாத ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் உள்ளத் தொடர்புபற்றி விளக்குவதுதான் மதம் என்ற அதன் கோட்பாடு நிலவி இருக்கிறவரையில், மதத்தின அடிப்படைபற்றி ஒருவன் தெரிந்துகொண்டுள்ளான் என்று கூறுவதற்கான வாய்ப்பு புறக்கணிக்கப்பட்டுத்தான் இடக்கும்."

"கடவுள் இருக்கிருர் என்ற உண்மையை, அறிவியல் காரணங்களைக் காட்டுவதில், ஒரு தீர்க்கதரிசியோ — தத்துவ சாஸ்திரியோ—சமயக் குருவோ, இதில் வெற்றிபெற்றிருக்கிருர் என்பது இடையாது."

கடன்கள் ஏறுகின்றன! வருமானம் குறைகிறது!!

சென்னை, பிப் 28—

எல்லா மாநிலங்களிலும் சமர்பிக்கப்பட்ட வரவு — செலவுத் திட்டங்களைப் பொதுவாகக் கவனித்தால், கடன்கள் ஏறுகின்றன—வருமானங்கள் குறைகின்றன என்பது புலனாகிறது.

சென்னையில் கடன்கள் அதிகரித்து வருகிறதென்பதைக் காணலாம். ரிசர்வ் பாங்குக்கு ரூ. 27 கோடி வரை சென்னை கடன்பட்டிருக்கிறது. 1953 செப்டெம்பர் 30-ந் தேதி வரை சென்னை எழுப்பியுள்ள கடன் ரூ 94 3 கோடி. சென்னை அடுத்த இரண்டு ஆண்கள் மூலதனச் செலவுகளுக்காக அதிக பணத்தை ஒதுக்க முடியாமலிருக்கிறது.

தற்காப்புச் செலவு

தொழில் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும்?

கராச்சி, (கி பாக்) பிப். 28—

காஷ்மீர் பிரச்சினை தீராமலிருப்பதனுல் தற்காப்பிற்காக அதிகம் செலவிட வேண்டியிருக்கிறதென்றும், அமெரிக்க இராணுவ உதவி கிடைப்பதனுல் தற்காப்புச் செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து நாட்டின் தொழிலபிவிருத்திக்கும்; க்ஷேம நலத் திட்டத்திற்கும் பயன்படுத்த முடியுமென்றும் பாக்-பிரதமர் கூறினுர்.

"மருத்துவக் கல்வி பெற ஆங்கில மொழி அவசியம்"

—ஆற்காடு இராமசாமி

"அவர் கூற்றை நான் அப்படியே ஆதரிக்கிறேன்"

—மந்திரி ஷெட்டி

சென்னை, பிப் 28—

"மருத்துவக் கல்வி கடினமான ஒன்றாகும்; எனவே, அதற்கான போதனை ஆங்கில மொழியிலேயே இருக்கவேண்டியது அவசியமாகும். தேசிய மொழிக்கு எதிராகவோ, மாநில மொழிகளுக்கு எதிராகவோ சொல்வதற்கு ஒன்றுமில்லை. கல்லூரி படிப்பின் இடை வகுப்பிலும் போதிக்கப்படும் ஆங்கிலத்தின் தரம் மட்டமானதாகவே இருக்கிறது. இதன் பலனாக, மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் பாடப் புத்தகங்களை இலகுவாகப் படிக்க முடிவதில்லை. விருப்பம் பாடத்துறை துவக்கத்திலேயே தொடங்கப்பட்டு விடுகிறது. எனவே, ஆங்கில அறிவு குறைந்திருப்பதற்கு மாணவர்கள்மீது குறை சொல்லுவதில் பயனில்லை. இத்துறையில் ஏற்கனவே முடிவு கட்டியுள்ள கருத்துக்கள், அறிவு, தர்க்க ரீதியான உண்மை ஆகியவைகளின் இடத்தைப் பெற்றுவிடக் கூடாது"

—என்று ஆற்காடு இராமசாமி முதலியார் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் உணவு உறையுள் நாள் விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

விழாவிற்கு சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி அவர்கள் தலைமை வகித்தார்.

உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதிக்கப்பட்டு வரும் ஆங்கில மொழியின் தரம் கூடுதலாக்கப்பட வேண்டும் என்றும் ஆற்காடு இராமசாமி அவர்கள் வலியுறுத்தினார்.

தலைவர் தனது முடிவுரையில் 'மருத்துவக் கல்லூரியில் போதனை மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று இராமசாமி முதலியார் கூறினதைக் குறிப்பாக நான் ஆதரிக்கிறேன். ஆங்கிலம் இல்லாமல் போனால், மருத்துவக் கல்வி அகில உலகக் கல்வியாக இருப்பதினால், உலகமறிந்த விஞ்ஞானத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வது நமது மாணவர்களுக்கு இயலாமல் போய்விடும்."

விவாகச் செலவுக்கு எவ்வளவு?

பாகிஸ்தானில் சட்டம்—மீறினால் அபராதம், சிறை!

டாக்கா, பிப். 26—

விவாகச் செலவுகளுக்காக எவ்வளவு செலவிடலாம் என்பது பற்றி யோசனை தெரிவிப்பதற்கு பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை நியமித்த செலக்ட் கமிட்டி தன் சிபார்சுகளை சமர்ப்பித்து விட்டது.

பரிசுகள் உள்பட, இருதரப்பினரும் தலா ரூ 500-க்கு மேல் விவாகச் செலவுகளுக்காகச் செலவிடக்கூடாது. இதை மீறுபவர்களுக்கு 6 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ 3000 வரை அபராதம் விதிக்கப்படும். பெண்களுக்கு சிறைத் தண்டனை இராது.

செயற்கை அரிசி உற்பத்தி

எவ்வாறு செய்யப்படுகிறது?

புதுடில்லி, பிப் 24—

மரவள்ளிக் கிழங்கு கடலை மாவு இவைகளைக் கொண்டே செயற்கை அரிசி செய்யப்படுகிறதாம்.

இந்த அரிசியுடன் ஓரளவுக்கு கால்ஷியம் கால்சியேட்டை சேர்த்த பின் உணவு சத்து அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அ. இ. எழுத்தாளர் மாநாடு

அண்ணாமலைநகர், பிப். 24—

அகில-இந்திய எழுத்தாளர் மாநாடு ஏப்ரல் 16, 17, 18-ந் தேதிகளில் அண்ணாமலை நகரில் நடைபெறும். நாடு முழுவதும் உள்ள சிறந்த எழுத்தாளர்கள் பலர் கலந்து கொள்வர். மாநாட்டிற்கு டாக்டர் எம். இராதாகிருஷ்ணன் தலைமை வகிப்பார்.

இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு

திருச்சி, பிப். 28—

5—3—54 அன்று காலை 8 மணிக்கு பனகுடி மாவட்ட போர்டு சத்திரத்திலும், 7–3–54 அன்று காலை 8 மணிக்கு தென்காசி டிராவலர்ஸ் பங்களாவிலும் இராணுவத்திற்கு ஆள் எடுக்கப்படும். அந்த இடத்திலேயே வைத்தியப் பரிசோதனை செய்து பதிவும் செய்யப்படும்.

17 வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட நல்ல திடகாத்திர முள்ளவர்கள், பள்ளி சர்டிபிகேட்டுடனும், அவர்கள் ஊரில் உள்ள முக்கியஸ்தர்களிடம் நன்னடக்கை அத்தாட்சிப்பத்திரத்துடனும் வரலாம் என திருச்சி உதவி ரெக்ருடிங் ஆபீசர் தெரிவிக்கிறார்.

வாணியம்பாடி தி. மு. கழகம்

நிறைவேற்றிய தீர்மானங்கள்

வாணியம்பாடி, (வ. ஆ.) பிப். 28-

இந்நகர் தி. மு. கழக நிர்வாகக் குழு கூட்டம் தோழர் செகநாதன் தலைமையில் நடைபெற்றபோது, நகர சபைக்குச் சொந்தமான சந்தை மைதானத்தில் கூட்டம் நடத்துவதற்கு ரு 5 கட்டணம் வாங்குவதைக் கண்டித்ததுடன், அக் கட்டணத்தைத் தள்ளுபடிசெய்யக்கோரியும், பொதுக் கூட்டம், திருமணம் இவைகளுக்கு ஒலிபெருக்கி வைப்பதற்கு ரு 2 கட்டணம் வசூலிப்பதைக் கண்டிப்பதுடன் அப்படி வசூலிப்பதை ரத்து செய்யக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோட்டப்பாளையம் தி.மு. கழக செயற்குழு கூட்டம்

23—2—54ல் செயலாளர் திபிச்சாண்டி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அத்துக்குத்தான் கண்டனப் பொதுக் கூட்ட வரவு செலவு கணக்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. மார்ச் திங்கள் இறுதியில் கழகத்தின் மூன்றாம் ஆண்டு விழாவை நடத்துவதெனவும், அன்று ஏழைகளுக்கு கஞ்சி அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மணப்பாறை தி. மு. கழக செயற்குழு கூட்டம்

23—2—54ல், கழக அலுவலக கட்டிடத்தில், தோழர் என். வடிவேலன் தலைமையில் நடைபெற்றபோது, 7—2—54 நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, மிஞ்சிய தொகை 47-1-0 தோழர் குமாரவேல் உதவி நிதிக் குழுவிடம், நிதிக்காகக் கொடுக்கப்பட்டது.

வெட்கக்கேடான சரணாகதியாம்!

லட்சியத்தை சுட்டிக் காட்டுகிறார் சிங்மன் ரீ!

சியோல், மார்ச். 1—

"அரசு கிழக்கின் பொதுவான முடிவிற்கு வழிகோலுவதற்காக பான்முன்ஜாம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது; ஆனால் இந்தோ — சீனாவில் முன்னைவிட மூர்க்கமாகப் போர் நடந்துகொண்டிருக்கிறது,"

என்று, கொரியா சுதந்திரத்தின் 38-வது ஆண்டு தினத்தை முன்னிட்டு பூசானில் நடந்த அணி வகுப்புக் கூட்டத்தில் தென் கொரிய ஜனாதிபதி சிங்மன் ரீ கூறினார். அவர் மேலும் கூறிய தாவது:—

"பான்முன்ஜாம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு வெட்கக்கேடான சரணாகதி; மூனிக் சரணாகதியின் விளைவைப்போல இதிலும் இரத்தம் சிந்தியாக வேண்டும்; நேச நாடுகள் ஒத்தாசைக்கு வராவிடினும் தன்னந் தனியாகவே வட கொரியா மீது படையெடுத்து கொரியாவை ஐக்கியப்படுத்தப் போவதாகக் கூறினார்!

"கொரியர்கள் பலவீனர்கள் அல்ல; எங்களிடம் நல்ல இராணுவம் இருக்கிறது. எங்களுடைய லட்சியமோ அதைவிடப் பெரியது," என்று கூறினார்.

நிதி நாடகம்

20—2—54 மாலை பல்லாவரம் தி. மு. கழகச் சார்பில் "இன்பக் கனவு" என்ற நாடகம் எம். ஜி. ஆர் நாடகமன்றத்தினரால் நடிக்கப்பட்டது. நாடக முடிவில் கிளைக் கழக செயலாளர் சா. பாலகிருஷ்ணன் ரூபாய் 501 கொண்ட பணமுடிப்பை செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் வசம் ஆத்தூர்குடி வழக்கு நிதிக்கென ஒப்புவித்தார்.

'பகுத்தறிவு' எனும் பொருள் பற்றி தோழர் எம். ஜி இராமச்சந்திரனும், ஆத்தூர்குடி வழக்கு பற்றி தோழர் சி வி. எம். அண்ணாமலையும் பேசிய பின் நாடகம் முடிவுபெற்றது. ... மன்றங்கள் சார்பிலும், கிளைக் கழகங்கள் சார்பில் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மாதுங்கா தி. மு. கழக செயற்குழு கூட்டம்

பம்பாய், பிப். 28—

21—2—53 காலை 10 மணிக்கு தோழர் ஈ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றபோது, விலகல் கடிதம் கொடுத்திருந்த தோழர் பொன் தி ர. சபாபதி தோழர்களின் விருப்பப்படி அதைத் திருப்பப் பெற்றுக் கொண்டார். பின்னர், தோழர் பெ. வரதராசன் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தாணா தி. மு. கழகத் துவக்க விழா

பம்பாய், பிப். 28—

21—2—54 மாலை 6 மணிக்கு யுனைடெட் ஸ்போர்ட்ஸ் கிளப் திடலில், தோழர் என். வள்ளிநாயகம் தலைமையில் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் எல். என். செழியன், தேவதாஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

செயலாளர்: பி. டி. பாண்டியன்; துணைச் செயலாளர்: எம் ராசகோபால்; பொருளாளர்: க. எஸ். பெருமாள்; நிர்வாக உறுப்பினர்கள்: என். வனமாமலை, கெ. லட்சுமிபதி, ஆர் பாண்டியன், பி. மாடசாமி, என். ஆறுமுகம், என் ராமசாமி, ஆர் கபி நாராயணன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

படித்தவர்களிடையே வேலையின்மை அதிகரிப்பு!

—:o:—

பதிவேடுகளில் 5,34,317 பேர் காணப்படுகின்றனர்!

புதுடில்லி, பிப். 28—

1954 ஜனவரி மாதத்தில், வேலையளிப்பு நிலவரத்தின் போக்கு, 1952-ம் ஆண்டிலும், 1953-ம் ஆண்டிலும் இருந்தது போலவே இருந்தது.

பரிசீலனை மாதத்தில் வேலையளிப்பு நிலையங்களுக்கு 19,254 காலி இடங்கள் பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டது; 13,606 பேர் வேலையிலமர்த்தப்பட்டனர்.

1953 டிசம்பர் மாதத்தில் 20,344 காலி இடங்கள் பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டது; 15,215 பேர் வேலையிலமர்த்தப் பட்டனர்.

ஜனவரி 31-ந் தேதியன்று வேலையளிப்பு நிலையங்களின் பதிவேடுகளில் பதிவாகியிருந்த வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 5,34,317 ஆகவிருந்தது.

படித்தவர்களில் வேலையில்லாதிருந்தவர்கள் பற்றிய புள்ளி விவரங்களைப் பரிசீலித்ததில் 1953-ம் ஆண்டு இறுதியில் வேலையளிப்பு உதவி கோரியிருந்தவர்களின் எண்ணிக்கை 1,63,776 ஆக இருந்தது; 1952 டிசம்பர் மாத இறுதியில் அது 1,20,019 ஆக இருந்தது. படித்தவர்களில் வேலையில்லாமலிருந்த பெரும்பான்மையினர், 'பிரதானமாய்ச் சுமாரான உத்தியோகங்களை நாடிய புதிய மெட்ரிகுலேட்டுகள் தான்! அவர்களுக்கு ஏற்ற வேலைகள் குறைந்த அளவிலேயே காலியாக இருந்தன.

கொழும்பு தி. மு. கழகம்

கொழும்பு தி. மு. க. கிளைக் கழகத்தின் தேர்தல் கூட்டம் 21—2—54 மாலை 5-மணிக்கு, தோழர்கள் டி. எம். பீர்முகம்மது, அழகுராஜா முன்னிலையில், நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்றது. தோழர் ... பி. தம்பித்துரை செயலாளராகவும்; எம் முக்தார் துணைச் செயலாளராகவும், எம். ஐ. ராசாமணி பொருளாளராகவும், தோழர்கள் ஆர். ஏ. மணி, என். கதிரவன், பால. சிவகதிரேசன், ஏ. எம். ஜோர்ஜ், எஸ். கே. சுந்தரராசன், பி எஸ். தேசம், வி. எஸ். சி. எஸ். அமீது, அரு. குமாரசாமி, ஏ. எஸ். மணவைத்தம்பி, க. ஆறுமுகம், இரா. பாண்டியன், நா ரெங்கநாதன், மா. சே. அருள், எஸ். நடராஜ், இரா. ராஜாமணி, ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் தி. மு. கழகம்

இலங்கை, பிப். 28—

21—2—54ல், தோழர் கு அண்ணாமலை இல்லத்தில் தோழர் டி. என். நாராயணன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, வி எஸ். நடராசன் செயலாளராகவும், எஸ். வி. கண்ணன் துணைச் செயலாளராகவும், கு அண்ணாமலை பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் டி வி நாயகம், பி. மாதவன். இரா. சுப்ரமணியம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆசிரியர் வேலாயுத மன்ற செயற்குழுக் கூட்டம்

மாயூரம், பிப். 28—

தோழர் ந இளங்கோ தலைமையில் 23—2—54 இரவு 8-மணிக்கு நடைபெற்றது. அதுபோது மூன்றாவது ஆண்டு விழாவின் வரவு-செலவு கணக்கு ஒத்துக் கொள்ளப் பட்டதுடன், தோழர் பி பாபுஜான் அவர்கள் இயற்கை எய்தியதைக் குறித்து அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

தாப்பாய் தி. மு. கழகங்கள் துவக்கம்

23—2—54-ல், தோழர் அ. செகதீசன் தலைமையில் தி. மு. கழகத் துவக்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு தெய்வீகன் செயலாளராகவும், ப. முத்துசாமி துணைச் செயலாளராகவும், க ரெத்தின சாமி பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் ம. வைத்திலிங்கம், மு. சரவணன், அ. செகதீசன், ஐயனார் குட்டி, செ. அருணாசலம், த. ரெங்கராசன், அ. நடராசன், ப. இராவன், எம். மகிபதாஸ், ஆரோக்கியசாமி, கே. முத்துசாமியும் ப. இராவணன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னும், 11 உறுப்பினர்களைக் கொண்ட தி. மு. கழகக் கிளை ஒன்று நிறுவப்பட்டது.

கணபதி அக்கிரகாரம் தி. மு. க. துவக்க விழா

22—2—54 மாலை 6-30 மணிக்கு அய்யம்பேட்டை தோழர் என். இராமச்சந்திரன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

இரவு 7-15 மணிக்கு தோழர் எஸ். சின்னதம்பி தலைமையில் தோழர்கள்: என் இராமச்சந்திரன், என். ஆறுமுகம், காந்தைய்னேசன், குடந்தை என். சி. பன்னீர்செல்வம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் என். பி சாமி இயக்கப் பாடல்கள் பாடினார். தோழர் வி. கே. மூர்த்தி நன்றி கூறினார்.

கலவையில் பொங்கல் விழா பொதுக்கூட்டம்

24—2—54ல், மாலை சி. வரதராசன் தலைமையில், நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வி. எஸ். கோவிந்தராசன், என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இரவு 9-30 மணிக்கு வீரப்பர் கலா மன்றத்தாரால் 'மனமணம்' என்னும் நாடகம் நடைபெற்றது.

பா. தா. ஆதி திராவிட மகாஜன சங்கம் பம்பாய் (கிளை)

21—2—54 இரவு 8-30 மணியளவில் அமைப்புக் கூட்டம். தோழர் வி. எஸ். டி. ராஜா தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் டி. வேதமுத்து தலைவராகவும், கே. எம். பிரகாசம் துணைத்தலைவராகவும், எஸ். மகாராசன் பொதுச்செயலாளராகவும், கே. டி. சுப்பையா, வி. எஸ். ராஜ் கட்சிச் செயலாளராகவும், எம். ஆர். ஆறுமுகம் பொருளாளராகவும், என். எம். முத்தையா, என். அந்தோணி தொண்டர்படைத் தலைவர்களாகவும், நிர்வாகக் குழு உறுப்பினர் 18 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தானியக் கொள்முதல்

சர்க்கார் நிறுத்திவிடும்?

புதுடில்லி, பிப். 28—

ஏற்கனவே அரிசி கொள்முதலை விருப்பத் திருப்தி அளித்திருப்பதால், குறிப்பிட்ட அளவு கிடைத்ததும் அரிசி கொள்முதலை நிறுத்திவிட மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் யோசனை கூறலாம் என்று தெரிகிறது.

லண்டன், பிப். 27—

ஐரோப்பாவிலேயே மிகவும் சக்தி வாய்ந்ததெனக் கருதப்படும் 5,000 குதிரை ஓட்டமுள்ள ரயில் எஞ்சின்கள் லண்டனில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்பு உபயோகிக்கப்பட்ட ரயில் எஞ்சின்களெல்லாம் 2,900 குதிரை ஓட்டமுள்ளதாகும்.

இரா. நெடுஞ்செழியன் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஓராண்டுக்கு முன்னால் 'ரேடிகல் ஹியூமனிஸ்ட்' என்ற தனது இதழில், ராய் ஒரு தலையங்கம் எழுதினார்—"ஜூலியஸ் சீசர், ஐரோப்பா முழுவதையும் கட்டி ஆண்டான்; ஆனால் அவனுக்குப் பிறகு ஐரோப்பா பல நாடுகளாகச் சிதறியது; அதைப்போன்றே இந்தியாவும், சமீப காலத்திலே மொழிவழியாகப் பல்வேறு பாகங்களாய் பிரியத்தான் போகிறது"—என்று, அந்தத் தலையங்கத்திலே குறிப்பிட்டிருந்தார். இன்று அந்த நிலைதானே நாட்டிலே நிலவுகிறது? இப்படி நல்ல தெளிவுடைய அறிவு ஓடையாக ராய் விளங்கினார்.

"ராயின் கருத்துக்கள் கொண்ட புத்தகங்கள் எல்லாம் நம் தாய்மொழி தமிழில் மக்களுக்குத் தரப்பட வேண்டும்; அதற்கான முயற்சியில் ஈடுபட இங்குள்ளவர்கள் முற்பட்டால் எங்களால் ஆன எல்லா உதவிகளையும் நாங்கள் செய்வோம்; ராய் எந்த உயர்ந்த கொள்கைகளை வகுத்துத் தந்துள்ளாரோ அவைகள் எல்லாம் நமக்கு வழிகாட்டிகளாய் விளங்குகின்றன. அவரது உள்ள உரமும், லட்சியத்தில் தளராத அவரது நம்பிக்கையும், புரட்சி வாழ்வும், நமக்கெல்லாம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு!"

"அரசியல் அறிஞர்க்கெல்லாம் அறிஞராய், பொருளாதார ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியராய் விளங்கிய ஒரு மேதையை நாம் இழந்துவிட்டோம்—உலகம் இழந்துவிட்டது; ஆனால் அவர் இவ்வுலகத்தை இழந்துவிட்டாரா என்றால்—நமக்குத் தெரியாது.

பெரும் அரசியல் அறிஞர்களெல்லாம் வழி தெரியாது திணறிய நேரத்தில் இதுதான் சரியான வழி என்று ராய் சுட்டிக் காட்டினார்.

பாமரர்களுக்கெல்லாம் ஆசிரியர்களாய்ப் பலர் விளங்கலாம்; ஆனால் அந்த ஆசிரியர்களுக்கு ஒரு ஆசான்; ஆசிரியன் தேவையாயிற்றே! அந்த ஆசிரியராய் விளங்கினார். ஒரு ராய் விட்டுப்போன காரியத்தை நம்மில் பலர் சேர்ந்தேனும், நம்மில் பலருடைய ஆற்றல்—அறிவு—உணர்வு இவைகளைக் கொண்டு, அவர் விட்டுப்போன காரியத்தைத் தொடர்ந்து செய்ய முடியுமா என்பதை ஆலோசிக்கத்தான் நாம் இங்கே கூடியுள்ளோம்.

ராயின் கருத்துக்கள் அவை பெறவேண்டிய உரிய இடத்தை மக்கள் மன்றத்திலே பெற முடியாது மறைக்கப்பட்டன; சதி செய்யப்பட்டன. அரசியலை உணர்ந்த அத்தனை பேரும், எதிர்க் கட்சியினர் கூட, ராய் அவர்களின் ஆற்றலை ஆராய்ந்தறியும் தன்மையை முதிர்ந்த அறிவைப் போற்றத்தான் செய்துள்ளார்கள். இன்றைய நிலையில் அவர் பெட்ரண்ட் ரஸலுக்கும் மேம்பாடு உடையவராக இருந்த ஒரு முது பெரும் அரசியல் அறிஞர்.

ராய் இப்போது நம்மிடையே இல்லை. இதுவரை அவரைப் போன்றவர்களாவது நம் கண்ணில் இன்னும் படவில்லை. ராய் கூட ஒரு 25 ஆண்டுகள் வாழ்ந்திருந்தால், இன்னும் எத்தனையோ அரசியல் சிக்கல்களை அறுத்திருப்பார். 'பெர்னாட் ஷா மாதிரியாக 90 வயது வரை ராய் வாழ்ந்திருக்கக் கூடாதா?' என்று இயற்கையான நமது மனித உள்ளம் ஏங்கத்தான் செய்கிறது. அவரது இறப்புக்கு நமது துக்கம், துயரம் இவைகளை நாம் வெளிப்படுத்த அல்ல—ஆனால் அவரது இழப்பை ஈடுகட்ட இயலுமா? என்பதை எண்ணிப் பார்க்கத்தான் நாம் இங்கே கூடியிருப்பது. உலகத்திலே கோடானு கோடி மக்கள் பிறக்கிறார்கள்—வாழ்கிறார்கள்—இறக்கிறார்கள்; ஆனால், அவர்கள் இறந்துபடுவதை எல்லாம் எண்ணி வருந்தாத நாம் ராயின் இறப்புக்காக வருந்துவானேன்?

ஆதியிலே மனிதன், தான் வேட்டையாடிய மிருகங்களின் பச்சை மாமிசத்தைத் தின்று கொண்டிருந்தான்; எங்கோ ஒரு காட்டிலே பற்றி எரிந்த நெருப்பால், அந்தக் காட்டிலிருந்த மிருகங்கள் பொசுங்குகின்றன; எரிந்து பொசுங்கிய மிருகங்களின் மாமிசத்தை அந்த மனிதன் உண்கிறான்; முன்பு, தான் தின்ற பச்சை மாமிசத்தைக் காட்டிலும், இப்படி நெருப்பில் வெந்த மாமிசம் சுவையாயிருப்பதைக் காண்கிறான்; எனவே, ஒருவன் சிந்திக்கிறான்—'நமக்கு வேண்டியபோது மாமிசத்தை வேகவைக்க நெருப்பைப் பெற முடியாதா? காடு எங்காவது பற்றி எரிந்தால் தானா நமக்கு நெருப்புக் கிடைக்கும்? அதுவரையிலே நாம் காத்துக் கொண்டுதானா இருக்கவேண்டும்'—என்றெண்ணிப் பார்க்கிறான்.

"ஒரு பெரும் பாறாங்கல் மலை உச்சியிலிருந்து உருண்டோடி வருகிறது; அது, மலையில் உராயும்போது தீப்பொறி பறக்கிறது. இதைக் காண்னும் அந்த மனிதன். ஒரு பாறாங்கல் இன்னொரு கல்மீது உராய்ந்தால் தீ மூளும் என அறிந்து, தானும் அவ்வாறே இரண்டு கற்களை ஒன்றோடொன்று உராய்ந்து தனக்குத் தேவையானபோது நெருப்பை உண்டுபண்ணிக் கொள்கிறான். அந்த ஒருவனின் சிந்தனை மனித சமுதாயத்தை ஒருபடி முன்னுக்கு இழுத்து வந்திருக்கிறது.

பிறகு, சக்கி முக்கி கற்களால் நெருப்பை உண்டுபண்ணி, வைக்கோல், கூளம் முதலியவற்றில் அதைத் தங்கவைத்து, தனக்குத் தேவையானபோது நெருப்பை உபயோகப்படுத்திக் கொண்டான்.

இன்னும் கொஞ்சம் அவன் சிந்திக்கிறான் — வைக்கோலில் நெருப்பு தங்குவதைக் காட்டிலும் கொழுப்பிலுள்ள பொருள்களில் நெருப்பு நீண்ட நேரம் தங்குவதைக் காண்கிறான். கொழுப்பில் உள்ள எண்ணெய் எரிவதையும் தெரிந்துகொண்டு அந்த எண்ணெயை, எள்ளிலிருந்து — முத்துக்கொட்டையிலிருந்து — வேப்ப முத்திலிருந்தும் பெறலாமென அறிந்து எண்ணெயை உற்பத்தி செய்து, தனக்குத் தேவையான நெருப்பை உண்டுபண்ணிக் கொள்கிறான்.

இந்த மனிதனின் சாதாரண சிந்தனை, ஒரு பெரும் மனித சமுதாயத்தை அதன் காட்டுமிராண்டி நிலையிலிருந்து இன்னும் ஒருபடி முன்னுக்கு இழுத்து வருகிறது. இப்படியாக, சாகாத் தலைமுறையாக பலர் தொடர்ந்து பாடுபட்டதினால் இன்று அறிவியல் துறை ஆச்சரியகரமான சாதனைகளைச் செய்கிற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இந்த அறிவியல் துறை வளர்ச்சியில், எம். என். ராய் பெரும் அக்கறையும் ஆதரவும் காட்டினார்.

[தோழர் நெடுஞ்செழியன் பேச்சு முடியவில்லை. தொடர்ந்து நாளை வெளிவரும்.]

மகிழ்ச்சியும் — மனவேதனையும்!

லண்டன், பிப் 28—

பிரிட்டனில் 15 ஆண்டுகளாக இருந்துவரும் பங்கீடு ஜூலை மாதத்தில் நீக்கப்படும்.

ஆனால், அதே சமயத்தில் சுமார் 10000 பேர்களுக்கு வேலை போய்விடும்; இவர்களில் சுமார் 7000 பேர் வேறு இலாக்காக்களில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

பெருந்தகை மறைந்தார்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வீழ்ந்தாற்போன்று, தோழர் வி. வி. டி. அவர்கள் திடீரென்று சாய்ந்து விட்டார்.

ஆதரவற்று வருவோர்க்கு ஆதரவளித்தல், வீழ்ச்சியுற்ற குடும்பங்களுக்குக் கைகொடுத்தல், நீதிக்கும் பரிந்து பேசுதல், நேர்மைக்கு உழைத்தல், பொது நலம் பேணுதல், எடுத்த செயலை முடித்தல், தொழில் திறம் போற்றுதல், இன்சொல் பகருதல் போன்ற அரும் பெரும் பண்புகளுக்கு அவர் நிலைக்களனாய் விளங்கினார்.

தூத்துக்குடி மாநாட்டில், வந்திருந்த பதினாயிரக்கணக்கான மக்களுக்கு உணவளிக்கும் கண்காணிப்புப் பொறுப்பை ஏற்று, எவ்வளவு திறம்பட நடத்திக் காட்டினார் என்பதிலிருந்தே அவரது ஆற்றலின் பெருமையை யாவரும் நன்கு உணரலாம்.

அவர் பங்கு கொண்டு பணியாற்றிய வாணிகக் கழகங்களும், பொது நிலையங்களும் பலப்பல. தூத்துக்குடிப் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்று, நகர சபைத் தலைவராகத் திகழ்ந்து அரும் பணி ஆற்றி வந்தார்.

தூத்துக்குடி சதி வழக்கில் சிக்கியுள்ள தோழர்கள் அனைவரும் மீட்சி பெற வேண்டும் என்பதிலும், அவ்வழக்கில் நீதி கிடைக்க வேண்டும் என்பதிலும் தணியா ஆர்வங்காட்டி, எல்லா வகையிலும் உதவி புரிந்து வந்தார். அத்தகையவருடைய இழப்பு தூத்துக்குடியில் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அவருக்கு வயது 56-தான் ஆகிறது. இன்னும் சில காலம் வாழ்ந்திருக்கலாமே என்ற ஏக்கம் நமக்குப் பிறக்கிறது. அவர் இயற்கையின் கொடுமைக்கரத்தால் பிரிக்கப்பட்டுவிட்டார்; இனி, என் செய்ய இயலும்! எனவே, நாமும் ஆறுதல் பெறுவோம்; அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கு நமது ஆழ்ந்த பரிவு உரித்தாகுக என்று கூறி, அவர்களையும் ஆறுதல் பெறச் செய்வோமாக!

இரா. நெடுஞ்செழியன்,
துணைச் செயலாளர், தி. மு. கழகம்.

துப்பாக்கிப் பிரயோகங்கள் 'தூயவர்' ஆட்சிக்குக் கரும் புள்ளிகள்!

நெசவாளர் கண்ணீர்—சர்வ கட்சிகளின் வேண்டுகோளை மத்யபீடம் மதியாததேன்?

சட்டசபையில் எம். பி. சுப்ரமணியம் நேர்முகத் தாக்குதல்

"தமிழர்கள் தங்கள் தன்மானத்தைக் காக்கும் பொருட்டும் தங்கள் எதிர்ப்பைக் காண்பிக்கும் பொருட்டும் தமிழ் நாட்டில் 300-க்கு மேற்பட்ட இடங்களில் பகல் வேளையில் ஓடும் ரயில்களை, யாருக்கும், எந்தப் பொருளுக்கும் ஊறு நேரிடாவண்ணம் நிறுத்தினார்கள். அவசியமில்லாமல் இருந்தும் கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் அறுவரைக் கொல்வதற்கும், பலரைக் காயப்படுத்தியதற்கும் சர்க்கார் பொறுப்பாளர்கள். 5000-க்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றனர். சர்க்காரின் கெட்ட எண்ணத்தின் காரணமாக மாக இன்னும் 100-க்கு மேற்பட்டவர்கள் சிறையில் வாடுகிறார்கள். இது இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் ஏனைய வெளி நாடுகளுக்கும் பரவிற்று. இந்த சம்பவம் சென்னை அரசாங்கத்தின் சரித்திரத்தில் ஓர் பெரிய கருப்புப் புள்ளி. இத்தகைய முக்கிய சம்பவம் கவர்னர் உரையில் குறிப்பிடப்படவில்லை."

—இவ்வாறு, சென்னை சட்டசபை வரவு - செலவுக் கூட்டத்தில், கவர்னர் நிகழ்த்திய சொற்பொழிவுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகையில், தோழர் எம். பி. சுப்ரமணியம் (திராவிட சட்டசபை கட்சி) அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் பேச்சின் சுருக்கமாவது:—

"மே. த. கவர்னர் அவர்களின் பேருரை நாட்டின் முக்கிய நடப்புகளை உள்ளடக்கியதாக இல்லாதது மிக்க வருந்தத்தக்கது.

"குறிப்பாக சென்ற ஆண்டில், தமிழ் மக்கள், தங்கள் தாய்மொழிக்குக் கேடு விளைவிக்கக் கூடிய இந்தி மொழி தேசிய மொழியாவதைக் கண்டித்து, பல வழிகளில் அமைதியான வகையில் எதிர்ப்பு காண்பித்தார், சர்க்கார் அதை கருத்தில் கொள்ளாததால், தமிழ் நாட்டில் உள்ள ரயில்வே நிலையங்களிலுள்ள இந்தி எழுத்துக்களை அழித்தார்கள். இதை, பிரதமர் நேரு உயர்ந்த படிப்பும், பண்பாடும் உடையவர் உபயோகிக்கக் கூடாத வார்த்தைகளால் இழித்துக் கூறினார்.

"புதிய கல்வித் திட்டத்தை சகல அரசியல் கட்சிகளும், காங்கிரசில் பெரும்பாலோர் உள்பட எதிர்த்தார்கள்; இச்சபை, தீர்மானம் மூலமாக தோற்கடித்தது. சமீபத்தில் சேலம், செங்கற்பட்டு, கோயமுத்தூர் மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் மாநாடுகள் மூலம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள் இவ்வளவு எதிர்ப்பையும் சர்க்கார் கருத்தில் கொண்டு திட்டத்தைக் கைவிடாததோடு மட்டுமல்லாமல், நகரங்களுக்கும் இதை விஸ்தரிக்கப் போவதாக பத்திரிகையில் செய்தி வெளிவருகிறது. இந்தப் போக்கு கண்டிக்கத்தக்கது 'மாற்றுத் திட்டம் எங்கே?' என்கிறார்கள். இப்பொழுள்ள வசதியைக் கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிக்க முடியும் என்கிறார்கள். கிராமப் புறங்களில் ஆரம்பப் பள்ளிகளில் இடம் இல்லை; ஆகையால் பிள்ளைகள் படிக்கவில்லை என்பது உண்மையல்ல—இட நெருக்கடி, உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்தான்! ஆகையால், இந்த முக்கியவாதம் அடிபட்டுவிடுகிறது.

"கைத்தறி நெசவாளர்கள் பிரச்னையைத் தீர்க்க இந்த சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அநேகமாக ஒற்றுமைப்படாத அத்தனை அரசியல் கட்சிகளும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்தும், ஆண்டுகள் இரண்டு ஆகியும் மத்திய அரசாங்கம் செவி சாய்க்கவில்லை.

"இவைகளை எல்லாம் பார்க்கும்போது மத்திய அரசாங்கத்தின் தொடர்பால் எவ்வளவு கேடு என்பது நன்றாக விளங்கும். இப்பொழுதாவது மற்ற நண்பர்களும், 'முதல்வர் ராஜகோபாலாச்சாரியும் திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தை உணர்வார்கள்' என நினைக்கிறேன்.

"மத்திய அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும், தென் இந்தியாவை நசுக்கும் நோக்குடனும் நடந்து வருவதை மத்திய அரசாங்கத்தில் பல பதவிகள் வகித்துவந்த முதல்வர் இராஜகோபாலாச்சாரி நன்கு உணர்ந்திருப்பார். எப்படி பாகிஸ்தான் பிரச்னையை அவசியமானது என்று ஆதரித்தாரோ, அதேபோல் மந்திரி சபையை விட்டு வெளியேறி, திராவிட நாட்டுப் பிரிவினைக்கு பாடுபடுவார் என்று நம்புகிறேன்.

கழகக் கூட்டம்

☆

ஆத்தூர்

3—3—54 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

43-வது வட்ட தி. மு. கழக மூன்றாம் ஆண்டு விழா

"சென்னை, மீர்சாகிப் பேட்டை, 43-வது வட்ட தி. மு. கழக 3-ம் ஆண்டு விழா 14—3—54-ல் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், ப. உ. சண்முகம், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்" என்று விழா அமைப்பாளர் டி. ஏ. துரை அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், ஆழ்வார் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, [illegible]